1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அரசாங்க அதிகாரிகளின் பிள்ளைகள் அரசாங்க பணியில் இல்லாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு மாற்று விடு தர ஏற்பாடு செய்ய முடியும்.

செஞ்சி வட்டத்திலுள்ள காட்டு நிலங்கள்.

* 860. **வினா—திரு. ரா. ரா. முனுசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் உள்ள காரை, செஞ்சி. பாடிபள்ளம், சென்றுலூர், எதப்பட்டு ஆகிய கிராமங்களின் அருகில் உள்ள தரைக்காடுகளை விவசாயம் செய்வதற்கென அங்குள்ள ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, செஞ்சி வட்டத்திலுள்ள காரை, செஞ்சி, பாடிபள்ளம். சென்றுலூர், எதப்பட்டு, வயலூர் ஆகிய கிராமங்களின் அருகில் ஆயிரக்கணக்கான தரைக் காடுகள் இருக்கின்றன. மரம் செடி இல்லாமல் காடுகள் பாழாகி இருக்கிறது. அந்தத் தரைக்காடுகளை அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளித்தால் ஏழை விவசாயிகள் அதை உழுது பயன்படுத்த முடியும்; ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மேலும் காட்டு நிலங்கள் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

மரம் வளர்ப்பு விழா.

* 861. **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்** : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1972 ஏப்ரல் 3

(அ) மாவட்டந்தோறும் வன மகோத்சவம், வன விலங்குகள் பாதுகாப்பு வாரம் ஆகியவைகள் கொண்டாடப்படுகின்றனவா?

(இ) இவ் விழாக்களுக்கு அரசு மானியம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) மரம் வளர்ப்பு விழாவை ஒட்டிய செலவுகளுக்காகத் தமிழக அரசு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ரூபாய் 500 வழங்கிறது. இத் தொகையை மாவட்ட ஆட்சியாளர், தமது மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் நடந்த வன விலங்கு வார விழாவை ஒட்டிய செலவுகளுக்காக, ரூபாய் 6,500க்கு தமிழக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, வன விலங்கு வாரங்கள் கொண்டாடுகிற நேரத்தில் வன விலங்குகளைத் திருட்டுத் தனமாக வேட்டையாடும் அபாயம். விஷயம் வைத்துக் கொல்லு கிறார்கள். குறிப்பாக முதுமலைப் பகுதியில் புலிகளை இந்த விஷம் வைத்துக் கொல்லுவதால் அதன் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது? முதுமலைக்காட்டில் உள்ள புலிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கிடப் பட்டிருக்கிறதா?

* மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே. அனுமதி இல்லாது வன விலங்குகளை வேட்டையாடினால், இப்போதே சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு சட்டம் இருக்கிறது. வன விலங்குகள் எந்த அளவில் இருக்கிறது என்பதை சர்வே செய்ய புதிய குழு ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இதற்கு முன்னாலே வன மகோத்சவம் என்று சொல்லி மரங்கள் நடப்பட்டதே, அவற்றில் எத்தனை மரங்கள் பிழைத்து இருக்கின்றன, குறிப்பாக மாதவரம் பால் பண்ணையில் வன மகோத்சவம் ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா?

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு மரங்கள் வைக்கப்பட்டன என்ற கணக்கு இருக்கிறது. சென்னை மாவட்டத்தில் 6,000 கன்றுகள் வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, 10-15 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மரம் வளர்ப்புத் திட்டம், மரம் நடும் திட்டம் என்று முன்னால் இருந்தவர்கள் செய்தார்களே, அவர்கள் நட்ட மரங்களில் எத்தனைக்குத் தண்ணீர் ஊற்றினார்கள், எத்தனை மரங்கள் பிழைத்தன என்ற கணக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே அது பற்றிய கணக்கு இல்லை. அகில இந்திய அளவில், தேசீயப் பணியாக ஏற்றுக் கொண்டு, ஒவ்வொரு மாநிலத்திலும், ஆண்டுக்கொரு முறை இந்த மரம் நடுவிழா கொண்டாடப்படுகிறது.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, முன்பு மரம் நடுவிழா என்று சொன்னார்கள். இது மரம் நடுவிழாவா, செடி நடுவிழாவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மரம் நடுவிழா என்று பெயரே தவிர, கன்றுகள், செடிகள் தான் நடுகிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் 500 தான் அரசாங்கம் அந்த விழாக் கொண்டாடுவதற்காக வழங்குகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 40-50 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 10 தான் வரும். ரூபாய் 10 வைத்துக் கொண்டு இந்த விழா நடத்துவது என்பது முடியாது. அரசாங்கம் மறு பரிசீலனை செய்து, அதிகமாகப் பணம் ஒதுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதிகமாகப் பணம் ஒதுக்க உத்தேசமில்லை. அங்கே விரும்புகிறவர்கள், பொது பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியவர்கள் வீடுகளில் வைத்து வளர்க்க வேண்டுமென்ற தாக்கீது ஒன்றை அரசு அனுப்பியுள்ளது.